உ

சிவமயம்.

சிவசண்முகன் றுணை.

ஆதிவயலூர் வெண்பா

அந்தாதி.

திரிசிரபுரம்,

ஸ்ரீமான், வித்துவான், அமிர்தம், சுந்தரநாதபிள்ளை அவர்கள்

இயற்றியது.

திரிசிரபுரம்,

ஹிந்து சேவிங்ஸ்பாங்கு மானேஜரும், மிராசுதாருமாகிய

ஸ்ரீமான், T. R. இராமநாராயண பிள்ளை அவர்களால்

அச்சிடப்பெற்றது.

காளயுக்தி ஆண்டு கார்த்திகைத் திங்கள்.

1918

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

உ

சிவமயம்.

சிவசண்முகன் றுணை.

முகவுரை.

நிலவுலகத்தே, மிகவுங் கொண்டாட்டப்பெறுஞ் சுப்பிரமணிய சுவாமி இன்புடன் எழுந்தருளியிருக்குந் தலங்களுள் "வயலூர்" என்பது ஒன்றாகும். இது மிகப் பழமையான தலம். அருணகிரி நாதரும் இதனைப்புகழ்ந்து பாடியுள்ளார். இத்தலத்திலேதான், அருணகிரி நாதருக்குச் சுப்பிரமணியர் இரண்டாம் முறை காட்சிதந்து உபதேசித்தருளியது என்பர். இதனை, அருணகிரி நாதர் திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழிற்கண்டுந்தெளியலாம்.

இவ்வருமைத்திருத்தலம், திரிசிரபுரத்துக்கு ஆறுமைலுக்கு மேற்கே காவிரியாற்றிற்குத் தென்பாலுஞ் சர்ப்ப நதிக்கு வடபாலு மமைந்துள்ளது. இத்தலத்திலேதான், ஸ்ரீசுப்பிரமணியப்பெருமான் தந்தைக்கே குருவாய மாசகலத்தன் தந்தையாகிய ஆதியைப் பூசித்ததாம். இத்தலத்துத்திருக்கோயிலினுள் வன்னி விருட்சமும், கோயிலுக்குக் கிழக்கில் சுமார் இருபது கஜதூரத்தே குமார தீர்த்த மென்றும் அக்கினி தீர்த்தமென்றுஞ் சொல்லப்படுந் திருக்குளமும் அமைந்திருக்கின்றன. குளத்து வடமேற்கு மூலையிற் றேரும், தேருக்குச் சமீபத்துக் கருப்புத்தேவும் பொருந்தியிருக்கின்றன. இத்தலத்தே மால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும்: திருமகள், வாணி, இந்திராணி முதலிய தேவதைகளும்: சூரியன், சந்திரன், அக்னியாய முச்சுடர்களும் பூசித்துப்பேறு பெற்றிருக்கின்றனர். சூரியன் முதலிய முச்சுடர்வழி வந்த மன்னர்கள் பலர் பூசித்துப் பேறுபெற்றிருக்கின்றனர். இதன் விரிவெல்லாம் எம்மாற்பாடப்பெற்ற, வடமொழிப் புராண மொழி பெயர்ப்பாகிய "வயலூர்ப் புராணத்தால்" நன்கறிய

லாம். இத்தலத்தெழுந்தருளியிருக்குஞ் சுப்பிரமணியக்கடவுளுக்கு: வயலூரன், வயலூர்க்குமரன், ஆதிவயலூர்க்குமரன், மேல்வயலூர்க் குமரன், ஆதிக்குமரன், வன்னிதலக்குமரன் எனப்பலதிருநாமங்கள் வழங்கிவருகின்றன. இத்தலத்துச்சிவபிரானுக்கு: அக்கினேசுரர், குமாரபூஜிதநாதர், வயலூர் ஆதிநாதர் எனப்பலதிருநாமங்கள் வழங்குகின்றன. தேவியாருக்கும்: பூர்வஸ்திதிநாயகி, குமாரபூஜிதநாயகி, வயலூர் ஆதிநாயகி எனப்பல திருநாமங்கள் வழங்கிவருகின்றன. இத் திருத்தலத்துக்கும்: ஆதிவயலூர், மேல்வயலூர், குமாரவயலூர், வன்னிவயலூர், அங்கிபூஜிதவயலூர் எனப்பலதிருநாமங்கள் வழங்கி வருகின்றன.

இத்தலம் மிகமகத்துவம் வாய்ந்ததும், இட்ட காமியங்களளிக்கும் பெருமை பெற்றதுமாம். இதன் விரிவெல்லாம் எம்மாற் பாடப்பெற்ற புராணத்திற்கண்டு தெளியலாம்.

இத்தலத்தில் எழுந்தருளியிருக்குஞ் சிவ சுப்பிரமணியக்கடவுள் பேரில் யாவரும் எளிதிற்படித்துத்தெரியக்கூடிய செந்தமிழால் தோத்திரரூபமாக வெண்பாவால் ஓரந்தாதி பாடவேண்டுமென்று பலநண்பர்கள் கேட்டுக்கொண்டபடியாலும், என் ஆத்மநண்பரும், *வெண்சுதை வியாபாரியும், சோழக்ஷத்திரிய பரம்பரையினரும், மிராசுதாரும் ஆகிய பாலக்கரை இடைத்தெரு ஸ்ரீமான், பெருமாள் பிள்ளை அவர்களின் மூத்த குமாரராகிய, ஸ்ரீமான், மதுரைநாயகம் பிள்ளை அவர்களும், திரிசிரபுரம், ஸ்ரீமான், †வைத்திலிங்கம் பிள்ளையவர்களும் இடைவிடாது தூண்டி உற்சாகப்படுத்தியமையாலும் இந்நூல் வெளியாயிற்று. இவர்களுக்கு என்றும் நன்றிபாராட்டநான் கடமைப்பட்டுளேன்

---

*வெண்சுதை = சுண்ணாம்பு. †62வது, வெண்பாவிற் குறிக்கப்பட்டவர் இவரே.

இதனை, அச்சிடப்பொருளின்றி மயங்கிய காலத்து, "என்னே மயக்கம்! கவலற்க! எத்தனையாயிரந் தமிழ்நூல் நீங்கள் பாடினும் அதனை நானே அச்சிரதமேற்றி, உலகெலாம் உலாவிக்கற்றூர் உளக் கோயிலிலமரவைக்கின்றேன்." என்று, உறுதிபுகன்று, அச்சிட்டருளியவர்கள், எனதின்னுயிர் நண்பரும், மிராசுதாரும், திரிசிரபுரம் இந்து சேவிங்ஸ் பாங்கு மானேஜரும், சிராமலைத் தாயுமானவர் மேல் "திரிசிராமலைக்கோவையைப்" பாடும்படிக் கேட்டுத்துறைக்கோர் பொற்காசு வீதம் பல நூற்றுக்கணக்காகப்பெரும் பொருடந்து சன்மானித்த வள்ளலுமாகிய ஸ்ரீமான், இராமநாராயணப்பிள்ளை அவர்களே. இவர்புகழ், திரிசிராமலைக்கோவையுள்ளும், அந்நூலின் முகவுரையினும் பரவ நிற்றல், காண்பார்க்குக் களிப்பைத்தராதிராது. இப்பெரும்வள்ளலை என் மனதார வந்தனஞ்செலுத்தி வாழ்த்துகின்றேன். இவ்வள்ளலைப் பற்றித் திரிசிராமலைக்கோவையிற் கூறியிருக்கும் பல பாடல்களுள் ஒருபாட்டை, ஈண்டு மாதிரிக்கு எடுத்துக் காட்டுதுஉம்,

தலைவன் இன்றியமையாமை இயம்பல்.

"இரப்பார்க் கருள்செய ராமநா ராயண னென்றுமுளன்
புரப்பார் தமையும் புரக்கச் சிராமலைப் புங்கவனுண்
டிரப்பார் விரகவெவ் வெம்பசிக் கின்னமு தோர்ந்தருளாற்
றரப்பா ருளீர்நீ ரிலையே லுயிரென்னுட் டங்கிடுதே."

இவ்வயலூர் அந்தாதியைக்கண்டு கேட்ட வித்துவான்கள் சிறப்புப்பாயிரந்தந்து சன்மானித்துளர். அதுவும், இந்நூலின் முன்பாகத்தில் அச்சிட்டிருக்கின்றும். அவர்களுக்கும் என் வந்தனத்தைச் செலுத்தி நன்றி பாராட்டுகின்றேன். இந்நூலைப் படித்துப்பார்த்து அடங்கா மகிழ்கொண்டு பெரும் பொருள் சன்மானித்து, அரங்கேற்றுதற்கேற்பாடு செய்த ஒருவர்தூர், ஸ்ரீமான், சொக்கலிங்க முதலியார் அவர்களின் குமாரரும், சோமரசம்பேட்டை ஸ்ரீமான், சீனிவாச

முதலியாரவர்களின் மருகருமாகிய * ஸ்ரீமான், சதாசிவ முதலியார் அவர்களுக்கும், மேல் வயலூர், ஸ்ரீமான் வீரமுத்து நாட்டார் குமாரர், ஸ்ரீமான், முத்துவீர நாட்டாருக்கும், கீழ்வயலூர், ஸ்ரீமான் முத்துசாமி நாட்டார் குமாரர், ஸ்ரீமான், முத்துக்கருப்ப நாட்டாருக்கும், வயலூர் மாஜி கிராம முனிசிப், ஸ்ரீமான், தங்கய்ய நாட்டாருக்கும் சோமரசம்பேட்டை சரஸ்வதி விலாசத் தமிழ்ச்சங்கத்தார்களுக்கும், ஏரிமங்கலம், ஸ்ரீமான், காத்தப்பெருமாள் பிள்ளை அவர்களுக்கும், கருப்பூர், ஸ்ரீமான், கிருஷ்ணக்கண்காணியாரவர்களுக்கும், திருக்கற்குடி, ஸ்ரீமான், மு. ராஜுப்பிள்ளை அவர்களுக்கும் நன்றி பெரிதும் பாராட்டி என் மனதார வந்தனஞ் செலுத்துகின்றேன்.

வயலூர்க் குமாரக்கடவுளின் சந்நிதியிலேயே இந்நூலை அரங்கேற்றக் களிப்போடிடங்கொடுத்துச் சன்மானித்த பெருந்தகையாளர்களாகிய கோவில் மானேஜர்கள், சோமரசம்பேட்டை, ஸ்ரீமான், அழகப்ப முதலியார் அவர்களின் குமாரர், ஸ்ரீமான், வேதமூர்த்தி முதலியார் அவர்களுக்கும், திரிசிரபுரம், தோட்டா, ஸ்ரீமான், ராதாகிருஷ்ணஞ்செட்டியார் அவர்களுக்கும், நான், நன்றிகாட்டி, அவர்களைப் பெரிதும் வாழ்த்துகின்றேன்.

இதனை, அழகாகக் குறித்த காலத்துள் விரைவில் அச்சிட்டுத் தந்தசதரன் ஸ்டார் அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் என் வந்தனத்தைச்செலுத்துகின்றேன்.

இதனை, அபிமானித்துப்படித்து இன்னும் என்னை இத்தகைய காரியங்களிற் செலுத்தும் பெருந்தகையாளர்களையும் வாழ்த்தி வணங்கக் கடமைப்பட்டுள்ளேன்.

---

* 91-வது பாடலிற் குறிக்கப்பெற்றவர்கள், இவரும், இவர் குழந்தையுமாம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கல்களிலே மாணிக்க முயர்வதனிற் கோகினூர் கணிக்கின் மேலாம்
சொல்களியே தருசிந்தா மணியதனி னுயர்ந்தவதிற் றூய தாய
மல்களியார் கௌத்துவமே சிறந்தவவற் றிற்கெல்லாம் மாலா இத்தே
புல்களிசேர் தேவாஞ்சுப் பிரமணியே சிறந்தமணி புகலி னம்மா. 1.

எம்மணிகண் குளிரவளங் காட்டுவைய லூர்முருக னெனுநற் றேவாம்
எம்மணிக்குஞ் சிறந்தமணி யெனுமுயர்சுப் பிரமணியை யிறைஞ்சி யேத்தி
வெம்மணியி லென்மொழியாங் கிழியினிடை வைத்தேனுன் விரும்பு மன்பால்
இம்மணியின் சீரறிந்தா ரம்மணிகண் டென்மொழியை யிகழ்வ துண்டோ. 2.

சுபம்! சுபம்!! சுபம்!!!

திரிசிரபுரம்,
4—12—18.

அ. சுந்தரநாதன்.

ௌ

சிவமயம்.

சோதக பத்திரம்.

பக்கம்	பாட்டு	அடி.	பிழை	திருத்தம்.
III.	சாத்துக் கவி.	3	சூட்டிணம்.	சூட்டி னனம்
			நூல்.	
4	11	3	ஆய்ந்து	ஆய்ந்து
,,	12	2	தௌளு	தெள்ளு
14	55	4	கால்,	கால்.
24	98	1	புகுநன்	*புகுநன்

உ

சிவமயம்.

சிவசண்முகன் றுணை.

ஆதிவயலூர் வெண்பா அந்தாதி.

சாத்துக்கவிகள்.

பிரம்மஸ்ரீ, சாது, சதாசிவப் பிரம்மம் என்னும் பெரியார்

திருவாய் மலர்ந்தருளிய சாத்துக்கவி.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஏறுயர்த்த கொடிப்பரமன் சிறைப்பிரமன் றுயரகற்ற வினிதா வந்தி
வீறுயர்த்த மறைமுதலி னெண்பொருளை விளம்புகென மிக்க காதல்
தேறுயர்த்த வறுமுகனை யைம்முகனார் கேட்டிடலுந் தெரிய வந்நா
ளாறுயர்த்த தேசிகனுத் திருவோ கத்தினுரை யளித்தா னன்றே. 1

அப்பனுக்கே குருவான தப்பகற்றக் குகன்முறையே யடைந்து [தானவ்
வப்பனுக்கே பூசைபுரிந் தப்பனுய ராசியுற்ற வாதி யூராம்
*வெப்பணுக்காச் சோலைசெறி வயலூரில் வாழ்குகனும் வேலோ னுள்ள
†மொப்பனுக்காத் தமிழ்வெண்பா வந்தாதி பிறந்திட்ட துலகி னம்மா

இந்ததமிழ் வெண்பாவந் தாதிதனைப் பிறப்பித்தோ னெவனே [யென்னில்
சுந்தனவன் தந்தைதா யிவர்தாளி லன்பருக் கருத்து மிக்கான்
முந்தவணி தமிழ்முறையே கற்றறிந்து கவிசொல்லு முதன்மை யாள
னந்தமிழ னமிர்தகவி புத்திரன்சுந் தரநாத னறிஞரேறே. 3

(* அணுக்கா = அணுகாத. † அணுக்கா = வருத்தாத.)

ஸ்ரீரங்கம், ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்; வித்துவானுமாகிய பிர்மஸ்ரீ, குரு. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் சாற்றிய சாத்துக்கவி.

உற்றவியற் செந்தமிழி னேங்குவெண்பா வந்தாதி
கொற்றவய லூர்க்குமரன் கூர்ங்கழற்கே — விற்பனமா
நாவன்மைச் சுந்தர நாதனிங்கு நாட்டினான்
பாவன்மை யானேங்கப் பார்த்து.

திரிசிரபுரம், செண்டு ஜோசப் கலாசாலைத் தலைமைத்தமிழ்ப் பண்டிதரும், புனிவர் சிட்டி பரீட்சையில் வித்துவான் பட்டம் பெற்றவருமான பிர்மஸ்ரீ. A. M. சடகோப ராமநுசாச்சாரியார் அவர்கள் சாற்றிய சாத்துக்கவி.

ஆதிமகன் கந்தன் அணிவயலூர் மேவுபெருஞ்
சோதிகுகன் தோட்கியையச் சொல்லிசையந் — தாதிதனை
வெண்பாவாப் பாடி வியன்சுந் தரநாதன்
பண்பாவா லோங்கினனப் பா.

திரிசிரபுரம், எஸ். பி. ஜி. கழகத்துத் தமிழ்ப்புலவர் ஸ்ரீமான் மு. நடேச முதலியாரவர்கள் சாற்றிய சாத்துக்கவி.

கொண்டலுறை தண்டலைசூழ் கோதேட்டு நல்வயலூர்ப்
பண்டை முருகன் பணைப்புயத்தே — ஒண்டமிழாற்
சுந்தர நாதன்றான் சூட்டினனந் தாதியெனு
முந்துறுநன் மாலை முதிர்ந்து.

திரிசிரபுரம், எஸ். பி. ஜி. கழகத்துத் திராவிட பாஷா பண்டிதர், பிர்மஸ்ரீ V. S. வெங்கட்டராவ் அவர்கள் சாற்றிய சாத்துக்கவி.

நண்பாரொண் சுந்தர நாதப்பேர் நாவலனோர்
வெண்பாவந் தாதினால் வித்தகத்தால்—எண்பாரும்
ஆதிவய லூர்முருகன் ஆசைகொளச் சூட்டினன்
தோதினுறும் வாழ்வுசுகத் தோடு.

சோழமாதேவி, வித்துவான் ஸ்ரீமான். அ. குப்புசாமிபிள்ளை அவர்கள் சாற்றிய சாத்துக்கவி.

ஆசிரியச்சந்த விருத்தம்.

விண்புகு தருநிறை தண்பொழில் கழனியும் விரும்புநல் வளந்தரலால்
விழைதகு மடமனை மகவுற வினரொடு வியக்குறும் வாழ்வினராய்க்
கண்புகு நுதலர னன்பின ரொடுவரு கவிஞரு மேனையருங்
கனிந்துள மகிழ்வுற விழைவன வுதவுறு கனமிகு நல்லோர்சேர்
மண்புக ழணிவய லூர்தனி லினிதமர் வடிக்கதிர் வேற்குமரன்
வனசமென் மலரடி தனில்வர முறுங்கவி மாலையைச் சூட்டினனுற்
றிண்புகு நலமணி மாளிகை நிரையொளிர் சிரபுர நகர்வாழ்வோன்
சீர்வளர் சுந்தர நாதனெ னும்பெயர் தீந்தமிழ் நாவலனே.

உ

மதுரைச் சிவஞான சபைக்காரிய தரிசியாராகிய,

ஸ்ரீமான். ம. அழகர்சாமிபிள்ளை அவர்கள்

சாற்றிய சாத்துக்கவி.

நேயமிகு நீபத்தோன் வாழ்வருளல் நிட்சயமே
தூயவய லூர்க்கந்தன் தோட்களிலே—தோயவெண்
நாவலனைத் சுந்தர நாதன்றான் சூட்டிய
பாவலரந் தாதியடிப் பார்க்கு.

திரிசிரபுரம், முனிசிபாலிட்டி வீட்டுவரி பில்கலெக்டரும்;
இந்நூலாசிரியர் மைத்துனருமாகிய, காட்டுப்புத்தூர்
ஸ்ரீமான் அ. ம. நாராயணசாமி பிள்ளை அவர்கள்

சாற்றிய சாத்துக்கவி.

கட்டளைக் கலித்துறை.

பங்கை மலைமகட் கீந்த பரனருட் பாலனெனுஞ்
செங்கை திகழயிற் கந்தன் வயலூரன் சிந்தைகொளச்
சங்கை யறுவுயர் வெண்பாவா லந்தாதி சாற்றினனென்
தங்கை கொழுநனுஞ் சுந்தர நாதத் தமிழ்வலனே.

தேவிகோட்டை, ஸ்ரீமான் ஏகப்பசெட்டியார் அவர்களின் குமாரரும்; மகா-ள-ள-ஸ்ரீ நாவலர் மு. நடேச முதலியாரவர்களின் மாணாக்கருமாகிய ஸ்ரீமான் யே. பேரி. சு. யே. பேரிய கருப்பன் செட்டியார் அவர்கள்

சாற்றிய சாத்துக்கவி.

சுந்தர நாதனுஞ் சொற்றகை யன்பினொடு
தந்தி முகவனூர் தன்பின்னும்—நந்தம்
வயலூர்வாழ் கந்தனுக்கு வண்வெண்பா வாலோர்
நயமாரந் தாதிசொற்றான் நன்கு.

திருச்சிராப்பள்ளி தாலூக்கா, வடகாப்புத்தூர், பிரம்மஸ்ரீ கோபால ஐயர் அவர்களின் குமாரரும்; திரிசிரபுரம் எஸ். பி. ஜி. கழகத்து மாணவரும்; சோமரசம்பேட்டை, சரஸ்வதி விலாசத் தமிழ்ச்சங்கத்துக் காரியதரிசியும்; இந்நூலாசிரியரின் மாணாக்கருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ G. வைத்திநாத ஐயர் அவர்கள் சாற்றிய சாத்துக்கவி.

சீராருங் கடலுடுத்த நிலமகளின் திருமுகத்துத் திலக மென்னப்
பாராரும் புகழ்பெற்ற வயலூர்வாழ் வேன்முருகன் பருத்த தோண்மேல்
தாராருந் தமிழ்வளத்தா னெனதாசான் சுந்தரநா தப்பேர் கொண்டோன்
ஏராரும் வெண்பாவந் தாதியெனு மலங்கலணிந் திசைகொண் டானே.

நாமக்கல் தாலூகா: திண்டமங்கலம், மிராசுதார் ஸ்ரீமான் நஞ்சையப்பபிள்ளை அவர்களின் குமாரரும்; திரிசிரபுரம், எஸ். பி ஜி கழகத்து மாணவரும்; இந்நூலாசிரியரின் மாணாக்கருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ **சின்னசாமி பிள்ளை அவர்கள்**

சாற்றிய சாத்துக்கவி.

சீர்பெருகும் நல்வயலூர்ச் செவ்வேளின் றுணையந்தே
பார்புகழும் பைந்தமிழாற் பாடினன்—பேர்திகழென்
சுந்தர நாதப்பேர் சொற்குரவன் பன்னுவெண்பா
மூன்றுமந் தாதிதனை முன்.

திரிசிரபுரம், உறையூர், பிர்மஸ்ரீ C. நாராயணசாமி ஐயர் அவர்களின் குமாரரும்; திருச்சி, S. P. G. கலாசாலை மாணவரும், இந்நூலாசிரியரின் மாணுக்கருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ **சாணகிராம ஐயர் அவர்கள்**

சாற்றிய சாத்துக்கவி.

மங்கையிடம் வைத்தவரன் மாபாலன் கந்தனெனும்
துங்கவய லூர்முருகன் றேண்மருவ—எங்கடமிழ்
நல்லாசான் சுந்தர நாதனென்பான் சூட்டினன்
சொல்லாரந் தாதியொன்றைச் சூழ்ந்து.

உ

சிவமயம்.

சிவசண்முகன்றுணை.

தேரடிக்கருப்பு—துதி.

உற்றே வயலூரில் ஓங்குருகன் சந்நிதிவாழ்
நற்றே ரடிக்கருப்பை நான்றுதிக்கின்---உற்றேயென்
எண்ணமெலாங் கைகூடும் ஏற்றமெலா முண்டாகுங்
கண்ணகன்ஞா லம்வருமென் கைக்கு.

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

ஆதிவயலூர் வெண்பா அந்தாதி.

காப்பு—வெண்பா.

திங்க ளணிசடையார் [1]சேயாந் திருவயலூர்
[2]துங்க முருகன் [3]றுணைத்தாட்கே—இங்கிதமாச்
செந்தமிழ்வெண் பாவாற் [4]றிகழுமந் தாதிசொலக்
கந்தனொடு யானைமுகன் காப்பு.

தந்தையார்—துதி.

வெண்பா.

கந்தன் வயலூரான் கான்மலர்க்குக் காதலொடு
செந்தமிழின் வெண்பாவாற் [5]சீரியதா—முந்துமந்
தாதிசொலத் தந்தை தமிழமிர்த நாவலன்றாள்
[6]ஓதிமனம் போற்று முவந்து.

---

1. சேய்=பிள்ளை; 2. துங்கம்=பரிசுத்தம்; பெருமை. 3. துணை=இரட்டை. 4. திகழும்=விளங்கும். 5. சீரியதா=சிறப்பாக. 6. ஓதி=துதித்து.

நூல்.

வெண்பா.

பூமாதி னின்முகமென் பொற்பார் வயலூரில்
நாமா திசைக்கவளர் நற்றேவே!—*மாமாதின்
நன்மருகா! இன்முருகா! நாயேன் மனத்தகத்
தின்மறுகா[1] தின்பத் திரு. (1)

இன்பத் திருவயலூர் என்னுந் திருக்கோயிலின்கண்
மன்பத் தருக்கென்றே வாய்ந்தமரும்—முன்[2]பித்தர்
ஈன்ற முருகா! எளியேன் றுயரகற்ற
[3]ஆன்றவுனக் கேனோ தா? (2)

ஆன வயலூரில் ஆர்ந்தமரும் ஆறுமுகா!
[4]தீனனெனைக் காத்தருளுந் [5]தேசிகனே!—கானவொரு
நற்குறத்தி காதலனே! நான்களிக்க மாமயின்மேல்
உற்றெனக்கு முன்வா உவந்து. (3)

உவந்து நினதடியே உண்ணயந்து போற்றுந்
தவந்தனையே கொண்டேன் தமியேன்—அவந்துடைத்தே
ஆதிவய லூரா! [6]அயில்பிடித்த செங்கரனே!
நீதியொடு காக்க நினை. (4)

---

1. மறுகாது = சுழலாது ; மனங்குழம்பாது. 2. பித்தர் = சிவபெருமான். 3. ஆன்ற = சிறந்த. 4. தீனன் = ஏழை. 5 தேசிகன் = குரு. 6 அயில் = வேல். * மாமாதின் = லட்சுமி தேவியின்.

நினையன்றி யாரை நினைப்பே னடியேன் ?
புனையன்றில்[1] போல்வள்ளி போகந்—தனைவிரும்பி
ஆண்ட வயலூரா ! ஆறுமுகா ! நின்கழலே
வேண்ட வருவேன் விழைந்து[2]. (5)

விழைந்துபல மேபுரியும் வீணனென வென்னைத்
தழைந்து வருபிறப்பிற் றள்ளேல்—குழைந்துனைப்
பாடு மடியேற்குப் பாரவய லூர்முருகா !
நாடுமகிழ் ஈவாய் நயந்து. (6)

நயந்து[3]வய லூர்மேவும் நாயகனே ! கந்தா !
பயந்துகம னுக்காப் படி[4]மேல்—சயந்[5]தருநின்
வேலுமயி லுந்துதித்தேன் வேண்டு மெனக்கருளிக்
கோலு சுகமனைத்துங் கூட்டு. (7)

கூட்டுபெரு மன்பாற் குணங்கெட்ட நாயேனும்
நீட்டுவய லூர்க்கந்தா ! நின்மலர்நேர்—தாட்டுணைக்கே
பாட்டிசைத்து நின்றேன் படா[6]வரு மென்றுயரை
ஓட்டியருள் செய்வாய் உணர்ந்து. (8)

உணர்ந்து வழிநில்லேன் ஓங்கறமுஞ் செய்யேன்
கொணர்ந்து பலயலரைக் கொண்டு—புணர்ந்தபவ

---

1. புனையன்றில் = அலங்காரமான அன்றிற்பட்சி. 2. விழைந்து = விரும்பி. 3 நயந்து = விரும்பி. 4. படி = பூமி. 5. சயம் = வெற்றி. 6. படா = துன்பப்பட ; மிகுதியாக.

நோயகல அர்ச்சியேன் நோக்குவய லூர்வேளே!
தூயநின் றாள்தா தொழ. (9)

தொழல்குறித்த தேவர்க்குத் தோன்றுபெருங் [1]கோவாய்
அழல்விரிக்கும் வேல்விடுத்தே அந்நாள்—[2]விழல்குறித்த
சூர்குலத்தைச் செற்றருளுந் தொல்வயலூர்ச் சேந்தா! வென்
சீர்குலத்தைக் காத்தருளைச் செய். (10)

செய்ய மறைப்பொருளே ! [3]செந்திற் குடியானே !
[4]ஐயவிடைக் குஞ்சரிதன் ஆரன்பா !—[5]செய்யணிதண்
ஆதிவய லூர்முருகா ஆய்ந்துநினை யேதொழு
தோதியிட [6]வெற்பணிக்க உள். (11)

[7]உள்ளும் பிரணவத்தி னொண்பொருளைத் தாதைக்கு
[8]விள்ளும் பரிசினுரை வித்தகனே !—தெள்ளுபுகழ்
பண்ணை வயலூர்ப் பரம்பரனே ! பாடுமென் [9]னுள்
எண்ணை யளித்தருள் ஏற்று. (12)

[10]ஏற்றுக் கொடியார் இளஞ்சேயே ! வெய்யகொடுங்
கூற்றுக் [11]கலசியுனைக் கும்பிட்டேன்—ஊற்றுமதுக்

---

1. கோ = அரசு. 2. விழல் = விழுதல், அழிதல். 3. செந்தில் = திருச்செந்தூர். 4. ஐயம் = உண்டோ இல்லையோ என்னும் சந்தேகம். 5. செய் = வயல். 6. எற்பணிக்க = எனக்குக் கட்டளையிட. 7. உள்ளும் = சிறப்பாக நினைக்கக்கூடிய. 8 விள்ளும் = பேசும். 9. உள் எண்ணை = மன்விருப்பத்தை. 10. ஏற்றுக் கொடியார் = ரிஷபவாகனத்தையுடைய சிவபெருமான். 11 அலசி = பயத்தால் தளர்ந்து.

காவார் வயலூர்க் கடம்பா! நற் கந்தா! தா
பூவார்நின் றாள்பணியும் பொற்பு. (13)

பொற்புமிகும் ஐங்கரற்குப் பூண்டதிருத் தம்பியெனும்
அற்புதநல் அண்ணா! அறுமுகவா !—பொற்பதுமத்
[1] தண்பணைசூழ் நீள்வயலூர்ச் சாமி! பர தேசிகனே!
பண்பணைவாக் காவென்னைப் பார்த்து. (14)

பார்த்துதிரு †மான்மகளைப் பண்டுமணங் கொண்டவனே!
ஆர்த்துவரும் [2] அந்தகற்கே அஞ்சினேன்—சீர்த்திமிகு
நல்ல வயலூரா! நாடும் புகழ்முருகா!
வல்லநின் தாளருள வா. (15)

வாவென்று வேதாவை வாய்திறந்து கூப்பிட்டுப்
போவென் றருஞ்சிறையிற் போக்குவித்தோய்!—*மாவென்ற
அண்ணா! அருள்வயலூர் அத்தா! அடியனுனை
எண்ணாப் பிழைபொறுப்பாய் இங்கு. (16)

இங்கு பிழைபொறுத்தே என்னைப் [3] புரப்பவரார்?
தங்கு புகழ்வயலூர்ச் சண்முகனே !—இங்கிதநல்
வள்ளி மணவாளா! வாரம்வைத் தென்னைநீ
எள்ளி விடாதருள எண். (17)

---

1. தண்பணை = குளிர்ந்த வயல். 2 அந்தகற்கே = யமனுக்கே. 3. புரப்பவரார் = காபாற்றுபவர் யார்? † திருமான்மகளை = திருமாலின் பெண்களாகிய வள்ளி தேவானை என்னும் பெண்களை. * மாவென்ற = மாமரமாகநின்ற அசுரனைவென்ற.

எண்ணுமுகம் ஆறுடையாய்! இன்கரமுன் னாலுடையாய்!
நண்ணுவய லூர்முருகா! நாயடியேன் — மண்ணுலகில்
வாழ்வுமதி யும்வளமும் வாய்க்கப்பெற் றெத்தகைய
தாழ்வுமுறா தோங்கவருள் தா. (18)

தாதாநீ என்றுன்னைச் சாராமன் அற்பரையே
தாதாநீ என்றிசைத்துச் சார்ந்தலுத்தேன் — வேதாவைக்
குட்டிச் சிறையிலிட்ட கோவே! வயலூரா!
எட்டிச்செல் லாதருள்வாய் எற்கு. (19)

எற்கமைந்த சாமி! இளையோய்! உனையன்றிச்
சொற்கமைந்த தாருண்டே சொல்லுகவே? — பொற்கலசக்
கோயில் வயலூர! [1]கொற்றவடி வேல! வெனைத்
தாயிற் [2]பரிந்தருணின் தாள். (20)

தாட்பணிந்தேன் செய்ய தமிழ்மொழியாற் பாப்புனைந்தேன்
[3]வாட்பணிபூண் சங்கரனார் மாமகனே! — நாட்டுவய
லூர்க்கந்தா! ஏழையெனை [4]உண்ணயந்தே கொண்டருளி
ஆர்க்கந்தான் ஓடவருள் முன். (21)

முன்னவனே! ஆறு முகத்தவனே! முத்திநலஞ்
சொன்னவனே! யானைமுகத் தோன்றனுக்குப்—பின்னவனே!

---

1 கொற்றம் = வெற்றி. 2. பரிந்து = இரங்கி. 3. வாட்பணிபூண் = ஒளிபொருந்திய பாம்பை ஆபரணமாக அணிகின்ற. 4 உண்ணயந்தே = மனம் விரும்பியே.

மன்னுவய லூர்க்குகனே! மாபாவி யாமெற்குந்
[1] துன்னுதுயர் ஓட்டியருள் சூழ்ந்து. (22)

சூழ்ந்து வருபிறவித் தொல்கடலிற் புக்குழன்றே
ஆழ்ந்து கழிவாரோ அன்புடனே—தாழ்ந்துநிதம்
நின்னடியே போற்றுமவர் நேயவய லூர்முருகா!
[2]பன்னடியேற் குண்மை பகர். (23)

பகருமுமை பாலா! பருத்தவரை தன்னை
நிகருமுன் நான்குதோள் நித்தா!—[3] தகருய்த்த
கந்தா! வயலூர்க் கடம்பா! கனிந்தென்பால்
வந்தாள நேரமிது வா. (24)

வாவா வடிவேலா! வாழ்வார் வயலூரா!
நாவா லடியேன் நவின்முறையைத்—தேவா! நீ
கேட்டருளி இன்னே கிளருன் அருளளித்துக்
[4]கோட்டமறக் காப்பாய் குறித்து. (25)

குறித்து மனத்தகத்தே கொண்டுன்னை [5]ஏத்தும்
[6]நெறித்து நினைவெனக்கு நேயம்—மறித்தென்பால்
ஆக்கி வளவயலூர் ஆறுமுகா! நாயேனைக்
காக்கிற் புகழுனக்காங் காண். (26)

---

1 துன்னு = நெருங்கிய. 2 பன்னடியேன் = துதிக்கும் அடிமை. 3 தகருய்த்த = ஆட்டுக்கடாவை வாகனமாகச் செலுத்திய. 4 கோட்டமற = அநீதமின்றி; வளைவின்றி. 5 ஏத்தும் = துதிக்கும். 6 நெறித்து = வழியது.

மலையடிகள் நூல்

காண்பானுங் காட்சியுங் காணப் படுபொருளும்
மாண்பான நீயாம் வணமுணர்ந்தேன்—[1]சேண்டேடும்
ஆறு முகனே! அணிவயலூர்க் கோனே! உன்
ஆறு முகமெற் கருள். (27)

அருள்செறியா றுமுகனே! ஆய்வயலூர்க் கந்தா!
தெருள்செறியீ ராறுகட் டேவே!—பொருள் செறிவாய்ச்
சொல்லானே! நல்லானே! சுத்தமறை யானவனே!
பொல்லா வெனையுங்கா பூண்டு. (28)

பூண்டிமையோர் போற்றும் புகழ்வயலூர்ப் புத்தமுதே!
வேண்டி யுனைப்பணிந்தேன் வேலவனே!—காண்டிருவுங்
கல்வியொடு நற்சுகமுங் காதலித்த [2]எற்கருளி
சொல்விழைவுந் தந்தாள் தொடர்ந்து. (29)

தொடர்ந்து புகழ்ந்து துணைமுலையாம் வள்ளி
படர்ந்து வளரும் பருத்த—வடர்ந்ததழை
நற்றருவே! சீர்வயலூர் நாதா! குமரா! நீ
குற்றமுறு தாண்டென்னைக் கொள். (30)

கொள்ளும் பிரணவத்தின் கூர்பொருளைச் [3]சாமிக்கு
உள்ளும் படியுரைத்த உத்தமனே!—தெள்ளுபுகழ்ச்
சாமி மலையானே! தண்வயலூர்ச் சண்முகனே!
காமி யெனையுநீ கா. (31)

1. சேண்டேடும்=தேவர்தேடும. 2. எற்கருளி=எனக்கருள் செய்து. 3. சாமிக்கு=சிவபெருமானுக்கு.

காவா தெனைவிடுப்பின் காண்வயலூர்க் கந்தா ! வுன்
[1]தாவா தொளிரருட்குத் தான்குறையாம்—நாவாரப்
பாடினேன் ஆடினேன் பாவிநான் ஆனாலும்
நாடிநீ ஈவாய் நலம். (32)

நலமார் வயலூரில் நாடியமர் கந்தா !
குலமார் [2]பரையின் குமரா !—வலமார்ந்த
கானமயில் வீரா ! கருணையொடு நாயேனை
[3]ஈனமறக் காத்தாள் இனி. (33)

இனியுன்னை யான்மறவேன் இன்வயலூர்க் கந்தா !
நனியுன்னைப் பாட நயந்தேன்—[4]துனியென்னைச்
சாரா தருள்செய்து சார்பவ்மெல் லாமோட்டிப்
பேராகக் காப்பாய் பெரிது. (34)

பெரிதுனது தாளேயான் பேணிப் பணிந்தேன்
அரிதுகொல் லெற்கருளல் ஐயா !—உரிமையுறச்
சேந்தா ! வயலூர்ச் சிவக்கொழுந்தே ! சண்முகனே
போந்தா ளெனையுமிப் போது. (35)

போதார் சரவணத்துப் பூத்தெழுந்த கந்தா ! வென்
தீதார் பிறவித் திறம்வேண்டேன்—மாதாரும்
பங்கன் மகனே ! பரைகுமரா ! நீயென்னை
இங்கன்பி னாள வெழு. (36)

1. தாவா=கெடாத. 2 பரை=பார்வதிதேவி. 3 ஈனமற=குறைவற. 4 துனி=துன்பம்.

[1]எழுக்கடந்த பன்னிருதோள் இன்முருகா! நாதா!
[2]வழுக்கடந்து நானுய்ய வந்தேன்—குழுக்கிடந்த
செல்வ வயலூர்வாழ்ச் சேந்தா! [3]எனக்குகந்த
பல்வரமுந் தந்தாள் பரிந்து. (37)

பரிந்துமுனங் கீரற்குப் பற்றுதுயர் நீக்கி
விரிந்தவருள் செய்த [4]விமலா!—தெரிந்துன்னை
நாடிவய லூரானே! நன்முருகா! வென்றுருகா
தொடிவந்தேன் நாடிக்கா உற்று. (38)

உற்றெழுந்த சூர்மடிய உம்பர் பெரிதுய்ய
மற்றெழுந்த பாலா! மயிலா! வென்—பற்றெழுந்த
துன்பாலே ஆதிவய லூரானே! ஆதலினால்
என்பாலே யன்பால் இரங்கு. (39)

இரங்கியெனைக் கண்பாராய் [5]ஈராறு கண்ணா!
[6]பரங்கிரியாய்! மேல்வயலூர்ப் [7]பண்பா!—[8]தரங்கநீர்
வற்றமுன் விட்ட வடிவேலா! செய்துள்ள
குற்றமுற் றும்பொறுத்துக் கொண்டு. (40)

---

1. எழு = இருப்புலக்கை. 2. வழு = குற்றம். 3. எனக்கு உகந்த = எனக்கு விருப்பமான. 4. விமலா = பரிசுத்தமானவனே. 5. ஈராறு கண்ணா = பன்னிரண்டு கண்களையுடையவனே. 6. பரங்கிரியாய் = திருப்பரங்கிரி என்னும் குன்றிலுள்ளவனே. (திருப்பரங்குன்றம்). 7. பண்பா = அழகையுடையவனே. 8. தரங்கம் = கடல்.

கொண்டு களிமயின்மேற் [1]கூர்ங்கனிக்கா அண்டமெலாம்
[2]பண்டு வலம்வந்த பண்டிதனே!—[3]தண்டலைசூழ்
ஆதிவய லூரப்பா! ஆறுமுகா! என்னைநனி
காதிவரு துன்பைக் களை. (41)

களைத்தேன் பலபிறப்பாற் காமுற்றேன் நின்றாள்
விளைத்தேன் [4]வினைப்பயிரை வேலா!—தளைத்தபெரும்
பாசப் பிணியறுத்துப் பற்றுவய லூர்முருகா!
நேசத் தெனைக்காத்தாள் நீ. (42)

நீலமயின் மீதேறும் நீண்டவடி வேலோனே!
[5]கோலமட வாரிருவர் கொண்கனே!—[6]ஞாலமதி
ஆதிவய லூர்முருகா! அப்பனுக்குந் தேசிகனே!
ஓதிவரும் என்றுயரை ஓட்டு. (43)

[7]ஓட்டுடனற் [8]றிங்க ளுவந்தணிந்த சங்கரனார்
நீட்டுவிழி வாய்வந்த [9]நின்மலனே!—காட்டுமியற் [10]
றொண்டருறை தொல்வயலூர்த் தூமணியே! கந்த! வெனைக்
கொண்டருளி நற்சுகமே கூட்டு. (44)

---

1. கூர்ங்கனி = நாரதர் சிவபெருமானிடந்தந்த மாங்கனி. 2. பண்டு = முன்னாளில். 3 தண்டலை = சோலை. 4. வினைப்பயிரை = வினையாகிய பயிரை. 5. கோலமடவார் = வள்ளி, தேவானை. 6. ஞாலம் = பூமி. 7 ஓட்டுடன் = பிரமகபாலத்தோடு. 8. திங்கள் = சந்திரன். 9. நின்மலன் = பரிசுத்தமானவன் 10. இயல் = அழகு.

கூட்டும் வினைப்பிறவிக் கொள்ளைக்குள் ளாகாமே
வேட்டு வயலூரா! வேலா! உன்—றாட்டுணையே
நம்பித் தொழுகின்ற நாயடியேன் உய்யத்தீ
வம்பிற் புகாதருணல் வாழ்வு. (45)

வாழ்வு தரும்வயலூர் மாமணியே! சண்முகனே!
தாழ்வு தருமுடலைத் தாங்கிநிதம்—வீழ்வு
குறித்துழலும் பேயேனைக் கொண்டாண்டாற் றீமை
தெறித்தழிய் உய்வேனுன் றோர். (46)

தேரிற் றிருவயலூர்த் தேவே! திருக்குமரா!
பாரிற் கடையேற்குப் பற்றார்சொல்?—நேரிலுனை
வந்திருதாள் கும்பிட்டேன் வண்டமிழாற் பாடினேன்
நொந்திருக்க லாமோ? நவல். (47)

நவன்ஞான நூலை நுனித்தறிந்த மேலோர்
தவன்மான தக்கோர்தாஞ் சாற்றுஞ்—சிவனீன்ற
பாலா! மயிலா! பனிவயலூர் வேலா! வென்
பாலார்வ முற்றருளப் பா. (48)

பாகாருஞ் சொல்வள்ளி பங்கா! பனிவயலூர்
[1]ஏகா! முருகா! [2]எழின்மாகா!—நாசா
பரணரிளம் புத்திரனே! பற்றினெனைப் பாழும்
மரணத் துருமற்கா வந்து. (49)

1ஏகா = ஒருவனே. 2. எழின்மாகா = அழகிய தேவலோகத்தவனே.

*வந்து நெருப்பும் வளர்பொரியாம் உற்கொண்டு
தந்து [1]தனிநதியிற் றும்வணங்க—முந்திருமூன்
றாமகவாய் வந்தொன்று மாதிவய லூரப்பா!
தாமகவா ரின்பமொடுன் தாள். (50)

தாள்வணங்கா வந்தச் [2]சதுமுகனைக் கொண்டடக்கி
ஆள்வகையா லாண்ட அருளாளா!—நீள்வயலூர்ச்
சேந்தா! முருகா! திகழ்தெய்வக் குஞ்சரிதன்
[3]காந்தா! வந் திப்போநீ கா. (51)

[4]காமரங்கள் பாடுமியற் [5]காமர் வளவயலூர்
[6]நாமவடி வேன்முருகா! நாயேனைச்—சேமமுறக்
காவாக்கா லுன்னருளைக் காசினிக்கண் யார்புகழ்ந்[illegible]
நாவாற் றுதித்திடுவார் நன்கு? (52)

நன்கு மடவன்னம் [7]நல்லார் நடைகற்க
மன்குளத்திற் றங்கும் வளவயலூர்—இன்குமரன்
தாண்மலரை நேசித்தேன் சண்முகன்சீர் வாசித்தேன்
நீண்மலமெல் லாமற்றேன் நேர். (53)

நேரான கங்கை நெடுநீர்ச் சரவணத்திற்
பேராக வந்த பெருங்குமரா!—நீராரும்

1. தனி நதி = ஒப்பற்ற நதி, (கங்கை). 2. சதுமுகனை = நான்கு முகங்களையுடை பிரமனை. 3. காந்தா = கணவனே. 4. காமரம் = தேன்வண்டு. 5. காமர் = அழகிய. 6. நாமவடிவேல் = சத்திருக்களுக்கு அச்சந்தரும் வடித்தெடுக்கப்பட்ட வேல். 7. நல்லார் = பெண்கள். * வந்து = காற்று.

பண்ணை வயலூரா! பாவியடி யேனுளத்துப்
புண்ணை யகற்றிப் [1]புரா. (54)

[2]புரந்தரன்மா லாதியரும் போற்றும் வயலூர்
நிரந்தரன்சார் வாழ்க்கை நிலைத்த—வரந்தருநற்
சண்முகனே! சங்கரனார் தந்தபெரு வீரா! வென்
கண்முகமா வந்தருளுன் கால், (55)

காலுமொளி வேல்பிடித்த கையா! முருகையா!
[3]நாலுமுகன் றாதைமகிழ் நன்மருகா!—மாலுளத்தால்
உன்னைமறந் தேனுன் உயர்வயலூர்க் கந்தா! நீ
என்னைமற வாதருளே. (56)

[4]ஏவென்ற கட்குறமான் இன்றுணையே! குஞ்சரிசேர்
பூவென்ற தாட்களிறே! [5]புத்தேளே!—[6]மீவென்ற
சூர்தடிந்த நல்வயலூர்ச் சுந்தரச்செவ் வேளே! யான்
பார்தழைந்து வாழ்ந்திருக்கப் பண். (57)

பண்கனிந்த நக்கீரர் பாட்டேற்ற நின்செவிகள்
எண்கனிந்த என்புன்சொல் ஏற்றிடுமோ?—விண்கனிந்து
பாடுபுகழ் பண்வயலூர்ப் பண்டிதனே! வேன்முருகா!
தேடுமெனக் கீவாய் திரு. (58)

---

1. புர = காப்பாற்று. 2. புரந்தரன் = இந்திரன். 3. நாலுமுகன் றாதை = நான்கு முகங்களையுடைய பிரமனின் தந்தையாகிய விஷ்ணு. 4. ஏவென்ற = அம்பை வென்ற. 5. புத்தேளே = தெய்வமே. 6. மீவென்ற = மேலாக வென்ற.

திருவார் வளவயலூர் தெய்வக் குமரா!
உருவார் [1]குறமா னுடன்சேர்—பெருமானே!
சுப்பிர மண்யா! சுயம்பிர காசா! வெவ்
தப்பறக் காத்தின்பந் தா. (59)

தாதார் மலர்ப்பொழில்சூழ் தண்வயலூர் வேண்முருகா!
மாதாரும் பங்கனிளம் மாமதலாய்!—நாதாவென்
காதலெலா முன்கழற்கே கந்தா! நீ கண்டிதனை
[2]ஏதமெலா மோட்ட விரக்கு. (60)

இரங்குபெரு விண்ணோ ரினிதுய்ய முன்னாள்
[3]தரங்கநெடுஞ் சேனைத் தலைமைத்—தரங்கொண்டே
வாகையுறச் சூர்தடிந்த வாழ்வயலூர்க் கந்தா! நீ
[4]வாகை யுறத்தா வளம். (61)

வளமார்நல் *வைத்திலிங்கன் மானுளத்துத் தங்கும்
இளமார்மின் வள்ளிபுணர் இன்பா!—களமாருங்
கண்டர் தருபாலா! காண்வயலூர்க் கந்தா! வெற்
கொண்டுன் னடிபணியக் கூறு. (62)

கூறுபழ னுபுரியாய்! கொற்றக் குமரா! பூ
நாறுமெழிற் சோலைசெறி நல்வயலூர்—தேறுபர

---

1. குறமான் = வள்ளியம்மை. 2 ஏதம் = குற்றம். 3 தரங்கம் = அலைகளையுடைய கடல், (கடல்போன்ற நீண்டசேனை என்பதாம்.
4. நீ வாகை யுறத்தாவளம் = நீ + வா + கையுற + தா + வளம்.
*வைத்திலிங்கன் = இது இரட்டுற மொழிதல் சிவபெருமானையும், இவ்வந்தாதியைப் பாடவேண்டிக்கொண்ட வைத்திலிங்கம் என்ற சிநேகரையுங்குறித்தது.

தேசிகனே! தித்திக்குஞ் செந்தமிழின் வீறெனக்கு
[1]மூசிவர வந்தருளென் முன். (63)

முன்னான மால்பிரமர் [2]முன்னிப் பணிபெருமா!
[3]பன்னாக கங்கணர்தம் பால! வான்—பின்னாக
ஓங்கு பொழில்வயலூர் ஒள்வடிவேற் கந்த! வென்
பாங்குவந் தாதரிநீ பார்த்து. (64)

பார்த்துன் றிருவழகைப் பாவிகா னின்பமுறச்
சீர்த்ததிரு[4]மஞ்ஞைமிசைச் செவ்வேலோய்!—நேர்த்தியமை
செய்யார் வயலூர்வாழ் சேவற் கொடியானே!
துய்யா! வடியேன்முன் றோன்று. (65)

தோன்றா பலபிறப்புந் தோய்ந்துழன்றே எய்த்தேனென்
[5]ஆன்ற வணிவயலூர் ஆறுமுகா!—என்றென்னை
*கையா தருளென்றன் காதலிமார் கோபமுறா
ஐயா பரங்கிரி யாய்! (66)

ஆயும் பிரணவத்தை அப்பனுக்கும் அன்றுசெவி
தோயும் படியுரைத்த தொல்குருவே!—வாயும்
மனமும் வழுத்தும் வளவயலூர்க் கந்தா!
தினமும் வளம்பெறயான் சேர்ந்து. (67)

1. மூசி = நெருங்கி, மொய்த்து. 2. முன்னி = நெருங்கி. 3. பன்னாக கங்கணம் = பல நாககங்கணம். 4. மஞ்ஞை = மயில், 5. ஆன்ற = சிறந்த, * கையாது = வெறுக்காது.

*சேர்த்துமுனந் தாயணைக்கச் செய்யமுகம் ஆறுடனே
ஆர்த்தவடி வாறும் அமைந்தொன்றாய்க்—கூர்த்தெழுந்த
கோவே! வயலூர்க் குமரா! குலம்விளங்கத்
தாவே வரமெற்குத் தான். (68)

தானே தனக்கிணையாய்த் தான்முதலாஞ் சண்முகனே!
$மானே தரவந்த மான்மகளை—வானே
புகழுமணங் கொண்ட புனல்வயலூர்க் கந்தா!
இகழுடையா மற்கா எனை. (69)

எனையன்றி இவ்வுலகில் ஏழைகளு முண்டோ?
உனையன்றி எற்காப்பா ருண்டோ?—தினைவிளைவு
காக்கு[1]மான் றோள்தோய்ந்த கந்தா! வயலூராய்!
வாக்குமா வாழ்வுந்தா மற்று. (70)

[2]மற்றுறுத்த வந்த மருவுபெருஞ் [3]சூர்க்கடலை
உற்றுவடி வேலால் ஒழித்தருளிப்—பற்றுவைத்தே
[4]குஞ்சரியைக் கொண்ட குணவயலூர்க் கந்த! வெனை
அஞ்சலெனக் காதா அருள். (71)

---

* ஆறு குழந்தையாயிருக்கத் தாய் கட்டி அணைத்த உடனே ஒரு குழைந்தை வடிவாய் ஆறு முகத்துடன் விளங்கியதை உணர்த்துகின்றது. $மான் பெறப்பிறந்த வள்ளியம்மை. 1. மான் = வள்ளியம்மை. 2. மற்றுறுத்த = மற்று + உறுத்த, (உறுத்த = அன்புஞ்செய்ய). 3 சூர்க்கடலை = சூர்களாகிய சமுத்திரத்தை. 4. குஞ்சரி = யானை.

அருள்பொழியு மீரா றலர்க்கண்ணா! அண்ணா!
இருள்வதியும் வெவ்வினைவாய் ஏங்கி—மருள்வழியே
புக்கேன் வயலூரா! பூங்கடம்பா! [1]நானுனதன்
புக்கே புகுந்தேன். [2]புகல். (72)

புகலுனது தாட்டஞ்சம் புக்கடைந்தேன் கந்தா!
[3]அகலுமெழில் நல்வயலூர் அத்தா!—[4]இகலிவரும்
*உட்பகைகளாறினையும் உற்றென்பால் நீயடைந்தே
நட்பமைத் தோட்டியருள் நாட்டு. (73)

நாட்டு பெருவீரா! நல்வயலூர்ச் சண்முகனே!
வாட்டு பெரும்பவமென் வன்னோயால்—நீட்டுதுயர்
கொள்ளா வகையன்பர் கூட்டத்துச் சேர்த்தென்னைத்
தள்ளாதென் னுள்ளத்திற் றங்கு. (74)

தங்கு புகழ்வயலூர்ச் சண்முகனே! வேன்முருகா!
இங்கு கடலுலகில் என்றுயரைப்—போக்குமொளி
நின்வேலா லோட்டி நிறையன்பே காட்டியெனை
மன்மேலாக் கொண்டீ மதி. (75)

†மதியணிந்த பெம்மான் மகனே! [5]திருமான்
மதியணியின் மாமருகா! வாய்த்த—[6]நுதிவடிவேற்

1. நானுனதன் புக்கே = நான் + உனது + அன்புக்கு + ஏ 2. புகல் = தஞ்சம். 3. அகலும் = விரியும். *உட்பகைகளாருவன:—காமம், குரோதம், வெகுளி, மதம், மாச்சரியம், லோபம். † மதியணிந்த பெம்மான் = சந்திரனைச்சடையிற் சூடிய சிவபெருமான். 4 இகலி = பகைத்து. 5 திருமான் = லட்சுமி தேவியாகியமான். 6. நுதிவடிவேற்கண்ணி = கூர்மையான வேலாயுதம்போன்ற கண்களையுடையவள்.

கண்ணி [1]குறமான் கணவா! வயலூரா!
நண்ணியெனைக் காப்பதெந்த நாள்? (76)

நாள்பலவா நானலைந்து நாடித் திரிந்துனது
தாள்பணிந்தே நிற்குந் [2]தகைமையிது—நீள்வடிவேல்
கொண்ட முருகா! குலவுவய லூர்க்குகனே!
கண்டருளிக் காத்தீ கதி. (77)

[3]கதிமயின்மே லேறியருள் கந்தா! கடம்பா!
மதிமதிக் கும்முகத்து வள்ளி—[4]பதியெனுஞ்சீர்
ஆதிவய லூரானே! ஆறுமுகா! நீயன்றி
நாதியெனக் காரே? நவில். (78)

[5]நவிலும் உமைமகனே! நல்வயலூர்க் கந்தா!
[6]கவினுமருட் பன்னிரண்டு கண்ணு!—செவிநலமா
ஆறிரண்டு கொண்டும் அடியேன் கதறுரைகேட்
[7]டீறிலருள் செய்யாத தென்?. (79)

என்பவநோய் உன்வேல் எதிர்நிலைக்கக் கூடுமோ?
இன்பமயில் வாகனனே! இன்வயலூர்—நன்முருகா!
உன்பிதா மாதா உனைக்கோபிப் பார்கொல்லோ?
அன்பிலா மையேன் அறை. (80)

---

1. குறமான்=வள்ளியம்மை. 2. தகைமை=தன்மை, பெருமை. 3. கதி=விரைவு. 4. பதி=கணவன். 5. நவிலும்=சொல்லக்கூடிய. 6. கவினும்=விளங்கும். 7. ஈறில்=முடிவில்லாத.

அன்றம்மறையின் உட்பொருளே! ஆதிவய லூராய்!
*நறைவிரியு நற்கடம்பா! கர்த்தா!—பிறையணியுஞ்
சங்கரனார் சேயே! தமியேன் றுயரகற்றி
[1]இங்கரணா நிற்பாய் எனக்கு. (81)

எனக்குவளந் தந்த எழில்வயலூர் வேலா!
மனக்குமகிழ் ஈயும் மயிலா!—உனக்கடிமை
பூண்டேன் அடியேனு புவியிற் குறையுண்டோ?
வேண்டேன் பிறதெய்வம் மேல். (82)

தெய்வமே தெய்வமே நீயேன் வருத்தமுறச்
செய்வதே னென்று நின்கதறி—[2]உய்வகையே
நாடி வயலூரா! நற்கந்தா! [3]நின்கழலே
தேடிவந் துற்றேன் தெளி. (83)

தெளிந்துநீர்க் கங்கை திகழ்மடுவிற் [4]சேயாய்
[5]ஒளிருமீன் கொங்கையமு துண்டு—களியுறவே
ஆடியருள் ஆதிவயல் அண்ணா! அறுமுகவா!
தேடியெனக் கீந்தருள்வாய் [6]தேசு. (84)

[7]தேசுபெறு விண்ணோர் தினம்பரவுந் தேசிகனே!
பேசுபுகழ் மேல்வயலூர்ப் பேர்முருகா!—[8]மாசுபடி

---

1. இங்கரணா = இங்கு எனக்குக் காவலாய். 2. உய்வகை = உஜ்ஜீவிக்கும் விதம். 3. நின்கழல் = உனது வீரக்கழல் தரித்த பாதம். 4. சேயாய் = பிள்ளையாய். 5. ஒளிருமீன் = விளங்குகின்ற கார்த்திகை முதலிய ஆறு நட்சத்திரங்களாகிய பெண்கள். 6. தேசு = அழகு. 7. மாசு = குற்றம். *நறை = தேன்.

நீயே யுளத்திருந்து நன்ஞானப் பேரொளி[1]யுள்
வாயே பெருக்கமனம் வை. (85)

[2]வையம் புகழ்வயலூர் மாவடிவேற் செவ்வேளோ!
[3]ஐயம் பலர்கொள் [4]அருவமதன் — [5]நையமனம்
போட்டியிட்டுக் கூட்டிவிடும் புன்மாதர் காதலினுன்
மாட்டிவிழிக் காதருளு வாய். (86)

வாயா லுனைப்பாடி வந்து வயலூரில்
ஆயா! அணிமயிலா! ஆறுமுகா! — [6]தேயாவென்
புன்கவியைப் போக்கிப் புகழ்செல்வந் தாவென்னும்
என்*கவியைக் கேட்டருள்வாய் இன்று. (87)

இன்றுவரையான்பெற்ற இன்பமெலாம் மேல்வயலூர
துன்றுபெரு நன்முருகா! தோன்மயிலா! — [7]ஒன்றுமுயர்
உன்றன் பணிந்த உறுதியன்றி வேறுண்டோ?
பின்றானவர் தின்னுமெனை நீ. (88)

நீயே முதல்வன் நினையன்றி எற்புரப்பார்
வாயே திறந்துரைக்க மற்றுண்டோ? — தாயே
எனைவருளும் மேல்வயலூர் இன்முருகா! எற்குன்
துனைவருள்செய் [8]யாறுண்டோ? காட்டு. (89)

---

1. உள்வாயே = மனத்தின் இடத்தே. 2. வையம் = பூமி. 3. ஐயம் பலர் = ஐந்து பாணங்களாக மலர்களை. 4 அருவமதன் = உருவமில்லாதவனாகிய மன்மதன். 5 நைய = வருந்த. 6 தேயா = குறையாத. 7. ஒன்றும் = பொருந்தும். 8. ஆறு = விதம். *கவி = வேண்டிக்கொள்ளும் சந்தம்.

*காட்டிருகோட்! டானையெனக் காதலொரு கோட்டானை
மூட்டிமுனே வள்ளி முலைபுணர்செங்—கோட்டிலுறை
கோட்டானே! மேல்வயலூர்க் கோனே! குமரா!வென்
பாட்டானே யுள்ளுருகிப் பார். (90)

பாரார் திருவயலூர்ப் பண்டிதனே! கந்தப்பா!
கூரார் §சதாசிவப்பேர்க் கோமான்சேய்—பேரார்
திருத்தண் பழநியப்பன் சீர்விழிகள் காணக்
கருத்துவைத்துச் சற்றே கனி. (91)

கனி [1]திகழ் சோலைக் [2]கணிவயலூர்க் கந்தா!
நனிதிகழ் செல்வ நலத்தால்—மனிதரெலாம்
மிக்கு மதிக்கவெனை மேதினிக்கண் நீசெய்து
எக்குறையுந் தீர்த்தாள் இசைந்து. (92)

இசைந்து நவவீரர் [3]ஏத்தமயில் மேலே
அசைந்தசைந் [4]திங்கிதமா ஆடி—விசைந்தென்பால்
வந்தாள லாகாதோ? மன்வயலூர் வாழ்குகனே!
[5]பிந்தா வளந்தா பெரிது. (93)

---

1. திகழ் = விளங்கும். 2. கணி = மதிக்கும்படியான. * காட்டில் வசிக்கும் இரண்டு கொம்பு யானைபோலத்தன் அண்ணனாகிய ஒற்றைக்கொம்பானையை உலாவச்செய்து வள்ளியம்மையைத் தானே வந்து தழுவிக்கொள்ளச்செய்த வரலாறு குறிக்கின்றது. § நண்பராகிய சதாசிவமுதலியாரின் புத்திரன் பழநியப்பனுக்குக் கண்ணொளி தெளிவாய்த்தெரியுமாறு வேண்டியது. 3 ஏத்த = துதிக்க. 4. இங்கிதமா = இனிமையாக. 5. பிந்தா = குறையாத.

பெரிதென்னை வந்தடுக்கும் [1]பீடில் பிறப்பை
அரிதென்கோ? நீயகற்றல் அத்தா!—தெரிதமிழ்ச்சீர்ப்
பண்டிதனே! நல்வயலூர்ப் பாரவடி வேன்முருகா!
கண்டினியீ யுன்றன் கழல். (94)

கழற்றுணையே பற்றினேன் கந்தா! எனைப்புன்
[2]அழற்று பிறவிக்குள் ஆக்கேல்—[3]தழற்கண்ணில்
வந்தசிவன் பாலா! வயலூர் முருகா!மென்
சிந்தனையில் நின்றீ சிறப்பு. (95)

சிறப்பு மிகுவயலூர்ச் சேந்தா! முருகா!
இறப்புபிறப் பிற்கே எணியுள்—உறப்பயந்தேன்
[4]ஆறுபடை வீட்டானே! ஆறுமுகா! இன்றுமுதல்
தேறுசுக வாழ்வருள்வாய் தேர்ந்து. (96)

தேர்ந்துன் றிருவடியே சிந்தித்தேன் [5]வந்தித்தேன்
சேர்ந்து பவப்பிறப்பிற் சீர்கெட்டுக்—கூர்ந்தமதி
வன்மை யறுதியான் வாழுவய லூர்முருகே!
[6]புன்மையற நெஞ்சுட் புகு. (97)

---

1. பீடில்=பெருமை இல்லாத. 2 அழற்று=துன்பப்படுத்துகின்ற. 3. தழற்கண்=நெற்றிக்கண். 4. ஆறுபடை வீடுகளாவன:—(I) திருப்பரங்குன்றம். (II) திருச்செந்தூர். (III) திருவாவினன்குடி. (IV) பழமுதிர்சோலை. (V) திருவேரகம். (VI) குன்றுதோராடல். 5. வந்தித்தேன்=வணங்கினேன். 6. புன்மை=கேவலம், குறைவு.

புகுநன் னெறிவிட்டுப் பொய்ந்நெறியே புக்கேன்
தகுமுன் கழலிணையே சார்ந்தேன்!—[1]மிகுமருளேன்
ஆதலினால் நல்வயலூர் ஆறுமுகா! இன்றென்னைக்
காதலினாற் காத்தருள்கொள் கண்டு. (98)

கண்டுன் கழலிணையே காமுற்று நாயேனுந்
தொண்டு புரியத் துணிந்திட்டேன்—[2]விண்டுமுதல்
தேவரெலாம் போற்றுந் திருவயலூர்ச் செவ்வேளே!
[3]ஓவறநீ யென்னுள் உறை. (99)

என்னுள் உறைகுமரா! இன்பவய லூர்முருகா!
[4]மன்னுள்ள வென்றுயரை மாற்றியே—என்றலைமேல்
ஏந்த வணிய [5]இறைஞ்சயான் என்பால்நீ
போந்தருளுன் தாட்கமலப் பூ. (100)

வாழி.

பூவார் வயலூர்ப் புகழ்முருகன் தாள்வாழி!
மாவார் மறைவாழி! வாழிநிலம்!—நாவாரின்
சுந்தர நாதன்பா சூழ்கடற்பா ரில்வாழி!
முந்துரனன் பர்வாழி! முன்.

வயலூர் அந்தாதி முற்றிற்று.

புகவேண்டிய நல்ல சிவசமயத்தைவிட்டுப் பொய்ந்நெறிக்குரிய கடவுளல்லாதாரை வணங்குகை. 1. மிகுமருளேன் = மிகுந்த அஞ்ஞானத்தாலாகிய மயக்கத்தையுடையேன். 2. விண்டு = விஷ்ணு. 3. ஓவற = குறைவு நீங்க. 4. மன் = மிகுதி. 5. இறைஞ்ச = துதிக்க.